வணிகவரித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.த.ஜேக்கப், இ.ஆ.ப.,<br>வணிகவரி ஆணையர்,<br>எழிலகம், சேப்பாக்கம்,<br>சென்னை 600 005 | திரு பி.பெரியசாமி,<br>ஸ்ரீ முருகன் ஏஜன்சீஸ்<br>93, ஏ, பைத்துார் தோட்டம்<br>நரசிங்கபுரம் 636 108<br>ஆத்துார் வட்டம், சேலம் மாவட்டம் |

க.எண்.41602/07 (VCC No:1121) நாள்: 28.8.2007

அய்யா,

பொருள் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி சட்டம் 2006 கமிசன் ஏஜண்ட் சில சந்தேகங்கள் கேட்டது குறித்து

பார்வை திருவா ஸ்ரீ முருகன் ஏஜன்சீஸ் , நரசிங்கபுரம் கடிதம் நாள் 25.7.2007

********

பார்வையில் குறிப்பிட்ட 25.7.2007 நாளிட்ட கடிதத்தின் மூலம் திருவா ஸ்ரீ முருகன் ஏஜன்சீஸ் நரசிங்கபுரம் என்ற வணிகர் கீழ்கண்டவற்றுக்கான தெளிவுரை வழங்குமாறு கோரியிருந்தார்.

1. நான் செய்து வரும் கமிசன் ஏஜன்சி தொழிலை VAT முறையில் அதே விலையில் தொடரலாமா ?
2. கமிசன் ஏஜன்சி தொழிலுக்கு VAT முறையில் ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டுமா ?
2. வரிசெலுத்துபவர் ஏஜண்டா ? அல்லது பிரின்சிபாலா ?

மேற்காணும் வணிகரது கடிதத்தில் கோரியிருந்த சந்தேகங்களுக்கு கீழ்கண்டவாறு தெளிவுரை வழங்கப்படுகிறது

மதிப்புக் கூட்டு வரி விதிமுறைகளின் நகல் விதி 10 (7) அனுப்பப்படுகிறது.

மதிப்புக் கூட்டு வரியில் கொள்முதலின்போது செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரிவரவு பிரின்சிபலுக்குத் தான் உண்டு. கமிசன் ஏஜண்ட் செய்யும் விற்பனைக்கு பின்சிபால் தான் வரிசெலுத்த வேண்டும். அப்போது தான் இந்த உள்ளீட்டு வரி வரவைக் கழித்துக் கொள்ள இயலும்.

இணைப்பு விதி 10 (7) ன் நகல்

(ஒம்) க.சண்முகம்,
வணிகவரி ஆணையருக்காக

நகல்
செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
தலைமைச் செயலகம் , சென்னை 9

/உண்மை நகல்/உத்திரவுப்படி/

வணிகவரி அலுவலர் (மகூவ)